# இயேசுவுடன் சிறுவராக..

## கிருபாவளன்



## இயேசுவின் வழியில்

## இனிதாய் செல்வோம்

’குழந்தைகளை என்னிடம் வர விடுங்கள். அவர்களைத் தடுக்க வேண்டாம் ” எனக் கூறி குழந்தைகளை அரவணைத்த இயேசுவின் சிலுவைப் பயணத்தைத் தியானிக்க வந்துள்ள அன்புக் குழந்தைகளே ! சிலுவையை நான் தான் தாங்குவேன் , திரிகளை நான் தான் ஏந்துவேன் என நீங்கள் போட்டி போடுகிறீர்கள். ஒவ்வொரு தலத்தைக் குறிக்கும் படம் இருக்கும் இடத்திற்கு ஓடிச் சென்று நெருக்கமாய் முழங்கால் படியிடுகிறீர்கள். உங்கள் ஆர்வத்தைப் பார்க்கும் போது நிச்சயம் இயேசு மகிழ்ச்சியடைவார். ஆனால் உண்மையிலேயே இயேசு சிலுவை சுமந்து சென்ற போது அந்த இடத்தில் நீங்கள் இருந்திருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும் ? இதோ இயேசு உங்களோடு உரையாடுகிறார். நீங்களே பதில் கூறுங்கள்.

# இயேசு தீர்ப்பிடப்படுகிறார்



*முதல் நிலை :*

*இயேசு : கைகள் கட்டுண்டு குற்றவாளியாக நான் பிலாத்து முன் நிறுத்தப்பட்டுள்ளேன். சாந்தமே நிறைந்த என்னருகே கயமையும், வஞ்சகமும் நிறைந்த கொடூரமான பரபாசும் நிறுத்தப்பட்டுள்ளான். எங்களில் யாரை விடுதலை செய்வது என பிலாத்து கேட்ட போது எனக்காக குரல் கொடுக்க அங்கே யாருமேயில்லை.*

**சிறுவன் : இயேசுவே! நான் மட்டும் அங்கு இருந்திருந்தால் நிச்சயமாய் உமக்காகக் குரல் கொடுத்திருப்பேன். இயேசு தான் வேண்டும். பரபாஸ் வேண்டாம் என உரக்க கூவியிருப்பேன்.**

*இயேசு : நீ சொல்வதைக் கேட்க ஆறுதலாய் உள்ளது. ஆனால் நீ அப்படி நடந்து கொள்வாய் எனத் தோன்றவில்லையே. 'இதுதான் சரி. இது தவறு. இப்படித்தான் நடக்க வேண்டும். இப்படி கூடாது. இது தான் நல்லது, இது கெட்டது' என உன் பெற்றோர், பெரியவர்கள் , ஆசிரியர்கள் சொல்வதைக் கேட்காமல் நல்லதை விடுத்து தீமையை செய்கிறாயே. அப்போதெல்லாம் நீ பரபாசைத் தான் தேர்ந்தெடுக்கிறாய்.*

**சிறுவன் : ஆம் ஆண்டவரே ! பெரியவர்கள் காட்டும் நல்ல வழியில் செல்லாமல் தீமையைத் தேர்ந்தெடுக்கும் போதெல்லாம் நல்லவராகிய உம்மை உதறிவிட்டு தீயவனாகிய பரபாசை தேர்ந்தெடுப்பது நான் தான் ஆண்டவரே நான் தான். என்னை மன்னியும்.**

**செபம் : இயேசுவே ! தீமையை விடுத்து நன்மையை தேர்வு செய்யும் நல்ல மனதை எனக்குத் தாரும். ஆமென்.**

# இயேசுவின் மீது சிலுவை சுமத்தப்படுகிறது



## இரண்டாம் நிலை :

*இயேசு : ஏற்கனவே கசையால் அடிக்கப்பட்டு, முள்முடி சூட்டப்பட்டு இரத்தம் சொரிந்து கொண்டிருந்த என் மீது பாரமான சிலுவை சுமத்தப்படுகிறது. "வேண்டாம் இந்த சிலுவை " என்று தடுக்கவோ அல்லது எனக்கு உதவவோ அங்கே யாருமே இல்லை.*

**சிறுமி : ஆண்டவரே ! நான் மட்டும் அங்கு இருந்திருந்தால் நிச்சயம் உம்மீது சிலுவை சுமத்த விட்டிருக்கவே மாட்டேன். நிச்சயம் தடுத்திருப்பேன்.**

*இயேசு : எத்தனை நல்ல உள்ளம் உனக்கு. ஆனால் உனக்கு உண்மை தெரியுமா? என் சிலுவைச் சுமைக்கு நீயும் காரணம். சிறு வயதில், படிப்பது, கீழ்படிந்து நடப்பது, கடமையைச் செய்வது இவைதான் உன் பொறுப்பு. இவற்றைச் செய்ய நீ தவறும் போது உன் சுமையை நான் சுமக்க நேரிடுகிறது. உன் கடமையில் நீ தவறும் போதெல்லாம் என் மீது சிலுவை சுமத்துவது நீ தான். நீயே தான்.*

**சிறுமி : ஆம் ஆண்டவரே ! படிக்க வேண்டிய நேரத்தில் படிக்காமல், செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமல், பிறருக்கு பாரமாக இருக்கும் போதெல்லாம் உம் மீது சிலுவை சுமத்துவது நான் தான் ஆண்டவரே நான் தான். என்னை மன்னியும்.**

**செபம் : இயேசுவே ! என் கடமைகள் ஆகிய சிலுவையை மகிழ்வுடன் சுமக்கும் நல்ல மனதை எனக்குத் தாரும். ஆமென்**

# இயேசு முதன் முறையாக கீழே விழுகிறார்



*மூன்றாம் நிலை :*

*இயேசு : உணவும் உறக்கமுமின்றி இரவு முழுவதும் பிலாத்து, ஏரோது என அங்குமிங்கும் அலைக்கப்பட்ட எனக்கு இப்போது சிலுவை சுமக்கும் பலமில்லை. தள்ளாடி கீழே விழுகிறேன். என்னைத் தாங்கிப் பிடிக்க யாருமேயில்லை .*

**சிறுவன் : ஆண்டவரே! நான் மட்டும் அங்கு இருந்திருந்தால் நிச்சயமாக உம்மைக் கீழே விழ விட்டிருக்கவே மாட்டேன். ஓடி வந்து உம்மைத் தாங்கியிருப்பேன்.**

*இயேசு : சிறிய உன் உள்ளத்தில் இத்தனை நல்ல எண்ணமா ! எவ்வளவு நல்லது ! ஆனால் இந்த நல்ல உள்ளத்தை நீ உன் அயலாரிடம் காட்டுவதாகத் தெரியவில்லையே ! உன்னை விட ஏழ்மையானவர்களை, உன்னை விட படிப்பில் பின் தங்கியவர்களை, உன்னை விட திறமை குறைந்தவர்களை நீ மட்டமாக எண்ணி, ஒதுக்கித் தள்ளுகிறாய். தாழ்வாய் நடத்துகிறாய். அவர்கள் முன் பெருமை பாராட்டுகிறாய். அப்போதெல்லாம் நீ கீழே தள்ளுவது அவர்களை மட்டுமல்ல. என்னையும் தான்.*

**சிறுவன் : ஆம் ஆண்டவரே ! ஏதோ ஒரு விதத்தில் என்னை விட பின் தங்கியவர்களை நான் அவமானப்படுத்தி தாழ்வாக நடத்தும் போதெல்லாம் உம்மைத்தான் கீழே தள்ளுகிறேன். உம்மை விழத்தாட்டுவது நான் தான் ஆண்டவரே! நான் தான். என்னை மன்னியும்.**

**செபம் : இயேசுவே ! யாரையுமே தாழ்வாக நடத்தாமல் அனைவரையும் மதிக்கும் நல்ல மனதை எனக்குத் தாரும். ஆமென்.**

# இயேசு தன் தாயை சந்திக்கிறார்



*நான்காம் நிலை :*

*இயேசு : ஐந்து அப்பத்தை ஐயாயிரம் பேருக்கு கொடுத்த போது, அதிசயங்களை நான் செய்த போது எல்லோரும் என்னோடு இருந்தார்கள். என்னைச் சந்திக்க ஓடோடி வந்தார்கள். இப்போது எல்லோரும் ஓடி ஒளிந்து கொண்டார்கள். என்னைச் சந்தித்து எனக்கு ஆறுதல் கூற என் அன்னையைத் தவிர யாருமேயில்லை.*

**சிறுமி : ஆண்டவரே ! நான் மட்டும் அங்கு இருந்திருந்தால் உமக்கும் உம் அன்னைக்கும் நிச்சயம் ஆறுதலாய் இருந்திருப்பேன். உங்களை சோகத்தில் தனியாக விட்டு விட்டு ஒதுங்கியிருக்க மாட்டேன்.**

*இயேசு : நீ எங்களை விட்டு ஒதுங்காமல் இருந்திருப்பாயா? சற்று யோசித்துப் பார். வசதி படைத்தவர்கள், திறமையானவர்கள், வெற்றி பெறுபவர்கள், பணமும் பொருளும் கொடுக்கக் கூடியவர்கள் இவர்களோடு நெருங்கிப் பழகும் நீ அவர்கள் தாழ்வுற்றால் ஒதுங்கிப் போவதில்லையா? அவர்களிடமிருந்து இனிமேல் எதுவும் கிடைக்காது என்று தெரிந்தவுடன் புதிய நண்பர்களை தேடுவதில்லையா? அப்போதெல்லாம் எங்களை தனியே தவிக்க விடுவது நீ தான். நீயேதான்.*

**சிறுமி : ஆம் ஆண்டவரே ! நல்ல நிலையில் இருக்கும் வரை நண்பர்களாகக் கொண்டு அவர்களே துன்பப்படும் போது அவர்களை விட்டு விட்டு ஒதுங்கும் நான், உம்மையும் தனியாக தவிக்க விடுகிறேன். உம் தாயையும் சோகப்படுத்துகிறேன். என்னை மன்னியும்.**

**செபம் : இயேசுவே ! இன்பத்தில் மட்டும் பங்கு பெறாது, பிறரது துன்பத்திலும் துணையிருக்கும் நல்ல மனதை எனக்குத் தாரும். ஆமென்.**

# இயேசுவின் சிலுவையை சுமக்க சீமோன் உதவுகிறார்



*ஐந்தாம் நிலை :*

*இயேசு : சுகம் பெற வேண்டும். நலம் பெற வேண்டும் என என்னைத் தேடி முன்பு எத்தனையோ பேர் வந்தனர். இப்போது சோர்ந்து போய் சிலுவையைச் சுமக்க முடியாமல் தவிக்கும் எனக்கு உதவி செய்ய சீமோன் வற்புறுத்தப்படுகிறார். அங்கே மனமுவந்து எனக்கு உதவி செய்ய யாருமேயில்லை .*

**சிறுவன் : ஆண்டவரே! நான் மட்டும் அங்கு இருந்திருந்தால் ஓடோடி வந்து உமக்கு உதவியிருப்பேன். வலுக் கட்டாயமாக அல்ல. மனமுவந்து உதவி செய்திருப்பேன்.**

*இயேசு : உனது உற்சாகத்தைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். எனக்கு உதவி செய்வது இருக்கட்டும். முதலில் உன்னருகே இருப்பவர்களுக்கு உதவி செய்ய உனக்கு மனமிருக்கிறதா? உன் வீட்டில் பெரியவர்களுக்கு உதவி செய்கிறாயா? உன் சக மாணவர்களுக்கு உதவ மனமுண்டா ? தெருவைக் கடக்க முயலும் ஒரு குருடருக்கு, தள்ளாடும் ஒரு முதியவருக்கு, நீ சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு ஏழைக்கு உதவ முன் வந்திருக்கிறாயா? அவர்களுக்குச் செய்யாத உதவியை எனக்கு செய்யப்போகிறாயா? எனக்கு உதவ மறுத்தவர்களுள் நீயும் ஒருவன் தான்.*

**சிறுவன் : ஆம் ஆண்டவரே ! சின்னஞ்சிறிய இவர்களுக்கு உதவ மறுத்தபோதெல்லாம் உமக்கே மறுத்தேன். என்னை மன்னியும்.**

**செபம் : இயேசுவே ! என்னால் முடிந்த சிறு சிறு உதவிகளை என்னருகே உள்ளவர்களுக்குச் செய்யக்கூடிய நல்ல மனதை எனக்குத் தாரும். ஆமென்.**

# வெரோனிக்காள் இயேசுவின் முகத்தைத் துடைக்கிறார்



*ஆறாம் நிலை :*

*இயேசு : முண்டியடித்துக் கொண்டு என் முகத்தைப் பார்க்க முன்பு எத்தனையோ பேர் வந்தனர். என் வாயசைவைப் பார்க்க, என் வார்த்தைகளைக் கேட்க கூட்டம் கூட்டமாய் வந்தனர். இப்போது இரத்தமும் வியர்வையும் சிந்தும் கோரமான என் முகத்தைப் பார்க்கவோ, அந்த கறைகளைத் துடைக்கவோ வெரோணிக்காள் என்ற வீரப் பெண்மணியைத் தவிர யாருமேயில்லை.*

**சிறுமி : நான் மட்டும் அங்கு இருந்திருந்தால் உம் முகத்தை மட்டுமல்ல, உம் உடல் முழுவதையும் துடைத்திருப்பேன். இதமாக தைலம் பூசி வருடியிருப்பேன்.**

*இயேசு : உன் பாசத்தைக் கண்டு நான் பூரிப்படைகிறேன். ஆனால் கறைப்பட்டிருப்பது என் முகம் மட்டுமல்ல. உன் முகமும் தான். தெய்வத்தின் சாயலாக இருந்த மாசற்ற உன் ஆன்மா இப்போது பாவத்தால் கறைப்பட்டிருக்கிறதே ! உன் பிஞ்சுக் கரங்கள் பிறர் பொருளை திருட முன் வந்து கறைப்பட்டுள்ளதே. உண்மையை பேசிய உன் உதடுகள் பொய் பேசி கறைபட்டிருக்கிறதே. இந்தப் பாவக்கறைகளைத் துடைக்க முயற்சி செய். அப்போது என் சாயல் வெரோணிக்காளின் துகில் மேல் பதிந்தது போல உன் ஆன்மாவிலும் பதியும். அதுவரை என் முகம் கறைபடிந்தே இருக்கும்.*

**சிறுமி : ஆண்டவரே ! பாவக்கறை படிந்த என் ஆன்மாவின் கறைகளைத் துடைக்காத வரை, உம் சாயலுக்குப் பதிலாக தீயவனின் சாயல் என் அகத்தில் இருக்கும் வரை உம் கறைபடிந்த முகத்திற்கு காரணம் நான் தான் ஆண்டவரே நான் தான். என்னை மன்னியும்.**

**செபம் : இயேசுவே ! பாவத்தால் உமது சாயலை இழந்த நான் மீண்டும் அதைப் பெற , மனம் வருந்தும் நல்ல மனதைத் தாரும். ஆமென்.**

# இயேசு இரண்டாம் முறையாக கீழே விழுகிறார்



*ஏழாம் நிலை :*

*இயேசு : பயணத்தின் களைப்பு, காயங்களின் வலி, பாதையின் கொடுமை இவையெல்லாம் சேர்ந்து என்னை மீண்டும் தள்ளாட வைக்கின்றன. கீழே விழுந்த எனக்கு உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை. மேலும் துன்புறுத்தாமல் இருந்தாலே போதும். ஆனால் அந்த வீரர்களோ விழுந்த என்னை உதைத்தும் அடித்தும் வதைக்கிறார்கள். என்னைத் தூக்கி விட அங்கே யாருமேயில்லை.*

**சிறுவன் : ஆண்டவரே ! நான் மட்டும் அங்கிருந்திருந்தால் நிச்சயமாய் உம்மை தூக்கிவிட்டிருப்பேன். கீழே விழுந்த உம்மை கரம் கொடுத்து தூக்கியிருப்பேன்.**

*இயேசு : நீ சொல்வதைக் கேட்க மிக ஆறுதலாக உள்ளது. ஆனால் உன் அருகில் இருப்பவர்கள் யாராவது தோற்றுப் போனால், விழுந்து விட்டால், துன்பப்பட்டால் நீ செய்வது என்ன? பரிகாசம் செய்கிறாய். "நல்லா வேணும்" என மனதுக்குள் சந்தோஷப்படுகிறாய். இப்படி மற்றவர்களின் தோல்வியைப் பார்த்து சந்தோஷப்படும் போது கீழே விழுந்த என்னை மேலும் துன்புறுத்துவது நீ தான்.*

**சிறுவன் : ஆம் ஆண்டவரே! என்னோடு இருப்பவரின் தோல்வியைக் கண்டு மகிழ்ச்சி அடையும் போதும், அவர்களுக்கு உற்சாகம் தந்து எழுப்பி விடாத போதும், கீழே விழுந்த உம்மை மேலும் துன்புறுத்துவது நான் தான். என்னை மன்னியும்.**

**செபம் : இயேசுவே ! மற்றவர்களது தோல்வியைப் பார்த்து சந்தோஷப்படாது, அவர்களுக்கு உற்சாகம் தந்து, தூக்கி விடும் நல்ல மனதை எனக்குத் தாரும். ஆமென்.**

# எருசலேம் பெண்கள் ஆறுதல் கூறுகின்றனர்



*எட்டாம் நிலை :*

*இயேசு : எருசலேம் பெண்கள் என்னைப் பார்த்து கண்ணீர் வடிக்கின்றனர். இவர்கள் நினைத்திருந்தால் பிலாத்துவுக்கு முன்பாக வந்து எனக்காக குரல் கொடுத்திருக்கலாம் அல்லது சீமோனைப் போலவோ, வெரோணிக்காவைப் போலவோ உதவியிருக்கலாம். ஆனால் ஒன்றுமே செய்யாமல், வெறும் கண்ணீர் மட்டும் வடிக்கிறார்கள். கண்ணீர் சிந்துவதைக் கடந்து எனக்கு உதவி செய்ய யாருமே இல்லை.*

**சிறுமி : ஆண்டவரே ! நான் மட்டும் அங்கு இருந்திருந்தால் அந்தப் பெண்களைப் போல் அழுவதோடு நின்றிருக்க மாட்டேன். உம் துயரைத் துடைக்க முனைப்பாக செயல்பட்டிருப்பேன்.**

*இயேசு : உன் உற்சாகம் எனக்கு ஊக்கம் தருகிறது. ஆனால் செய்ய வேண்டியதை செய்ய வேண்டிய நேரத்தில் செய்யத்தவறி பின்பு வெறுமனே அழுத அந்தப் பெண்களைப் போல நீயும் இருக்கிறாயே . வீட்டுப் பாடங்களைச் செய்யாமல் வகுப்பில் தண்டனை பெற்று அழுகிறாய். படிக்க வேண்டிய நேரத்தில் படிக்காமல், பரீட்சையில் தோல்வியடைந்து அழுகிறாய். கடமைகளைச் செய்யாமல் பின் கஷ்டப்பட்டு கண்ணீர் வடிக்கிறாய். இப்படி நேரத்தை வீணடித்து செய்ய வேண்டியவற்றை செய்யத் தவறும் போதெல்லாம் இந்தப் பெண்களைப் போல் தான் நீயும் இருக்கிறாய்.*

**சிறுமி : ஆம் ஆண்டவரே ! கடமையில் தவறி விட்டு பின் கண்ணீர் வடிப்பதே எனக்குப் பழக்கமாகி விட்டது. அப்படி செய்யும் போதெல்லாம் இந்தப் பெண்கள் கூட்டத்தில் நானும் ஒருவள். என்னை மன்னியும் .**

***செபம் : இயேசுவே ! செய்ய வேண்டிய செயல்களைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்து முடிக்கும் கடமை உணர்வை எனக்குத் தாரும். ஆமென்.***

# இயேசு மூன்றாம் முறையாக கீழே விழுகிறார்



**ஒன்பதாம் நிலை :**

*இயேசு : உடலும், உள்ளமும் சோர்ந்து உருக்குலைந்து போன நான் மூன்றாம் முறையாக கீழே விழுகிறேன். இந்த நிலையைப் பார்த்த பின்னரும், எனக்கு உதவி செய்து என்னை எழுப்பி விட்டு எனக்கு ஆறுதல் தர யாருமேயில்லை .*

**சிறுவன் : ஆண்டவரே ! நான் மட்டும் அங்கு இருந்திருந்தால் மூன்றாவது முறையாக நீர் கீழே விழ விட்டிருக்கவே மாட்டேன். நீர் தள்ளாடும் போதே உம்மைத் தாங்கிப் பிடித்திருப்பேன்.**

*இயேசு : உன் அன்பான வார்த்தை எனக்கு ஆறுதலாய் உள்ளது. ஆனால் என்னைக் கீழே விழ வைத்தது உடல் சோர்வு மட்டும் தானா? இல்லையில்லை. நீயும் தான். மீண்டும் மீண்டும் செய்த பாவத்தையே செய்கிறாயே! யாரோடு சேர்ந்தால் தவறு செய்ய நேரிடுமோ, அவர்களோடே சென்று தவறுகிறாயே! அப்போதெல்லாம் என்னை மீண்டும் மீண்டும் கீழே விழச் செய்வது நீ தான். தீய நண்பர்கள், தீய புத்தகங்கள், தீய பழக்கங்கள் இவற்றை விட்டுவிட மனமில்லாமல் அவற்றிலேயே விழுந்து கிடக்கிறாயே, அப்போதெல்லாம் என்னை கீழே தள்ளுவது நீதான்.*

**சிறுவன் : ஆம் ஆண்டவரே ! செய்த பாவத்தையே மீண்டும் மீண்டும் செய்யும் போதும், பாவத்திலிருந்து எழுதுவதற்கு முயலாத போதும், உம்மை மூன்றாம் முறையாக கீழே தள்ளுவது நான் தான் ஆண்டவரே நான் தான். என்னை மன்னியும்.**

**செபம் : இயேசுவே! படிகிப் போன பாவங்களை விட்டு விடவும், பாவச் சூழல்களைத் தவிர்க்கவும் வேண்டிய நல்ல மனதை எனக்குத் தாரும். ஆமென்.**

# இயேசுவின் ஆடைகளைக் களைகின்றனர்



*பத்தாம் நிலை :*

*இயேசு : காயப்பட்டு இரத்தம் தோய்ந்திருந்த என் உடலோடு ஒட்டிக் கொண்டிருந்த ஆடைகளைக் களைகின்றனர். சதையைப் பிய்த்துக் கொண்டு ஆடைகள் கிழிகின்றன. ஏற்கனவே இருந்த வேதனையை இது அதிகரிக்க, மனமும் வேதனைப்படுகிறது. இதனைத் தடுக்க அங்கே யாருமே இல்லை.*

**சிறுமி : ஆண்டவரே ! நான் மட்டும் அங்கு இருந்திருந்தால் நிச்சயமாய் இந்த அவமானத்தை அனுமதித்திருக்கவே மாட்டேன். உம் ஆடைகளைக் களைய விட்டிருக்கவே மாட்டேன். என் ஆடைகளால் உம்மைப் போர்த்தியிருப்பேன்.**

*இயேசு : உனது அக்கறையும் அன்பும் எனக்கு இதமாக இருக்கிறது. ஆனால் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள். என் ஆடைகளைக் களைந்தாலும் என் சுயரூபம் மாறவில்லை . அது மாசுமறுவற்றது. ஆனால் உன் வேஷம் கலைந்தால் சகிக்கவில்லையே. ஆசிரியருக்கு முன்னும், பெரியவர்கள் முன்பும், அவர்கள் பார்க்கும் போதும் நல்ல பிள்ளை போல் இருந்து விட்டு அவர்கள் இல்லாத நேரத்தில் எல்லா தகாத காரியங்களையும் செய்கிறாயே ! பார்ப்பதற்கு நல்லவன் போல் இருந்து விட்டு மறைவாக தீயவற்றைச் செய்கின்றாயே. இந்த வேஷத்தைக் கலைக்கத்தான் எனக்கு இந்த தண்டனை. என் ஆடைகள் களையப் பட்டதில் உனக்கும் பங்குண்டு.*

**சிறுமி : ஆம் ஆண்டவரே! மற்றவர்கள் பார்க்கும் போது நல்ல பிள்ளை போல் வேஷம் போட்டுவிட்டு, மறைவாக நான் செய்யும் தவறுகள் தான் உம்மை நிர்வாணப்படுத்தின. என்னை மன்னியும்.**

**செபம் : இயேசுவே ! மற்றவர்கள் கண்களுக்கு நல்லவனாய் நடிப்பதைத் தவிர்த்து, எப்போதுமே உம் கண்கள் முன் நல்லவனாய் இருக்கும் நல்ல மனதை எனக்குத் தாரும். ஆமென்.**

# இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்



*பதினொன்றாம் நிலை :*

*இயேசு : நோயாளிகளைத் தொட்டு குணமாக்கிய என் கைகளை ஆணிகளால் துளைக்கிறார்கள். நல்லது செய்வதற்கே நாடெங்கும் சுற்றித் திரிந்த என் கால்களை சிலுவையில் அறைகிறார்கள். வேண்டாம் இந்தக் கொடுமை ' என இதைத் தடுக்க அங்கே யாருமேயில்லை.*

**சிறுவன் : ஆண்டவரே ! நான் மட்டும் அங்கு இருந்திருந்தால் நிச்சயமாய் உமது கைகளையும், கால்களையும் ஆணிகளால் துளைக்க விட்டிருக்க மாட்டேன். உம்மைச் சிலுவையில் அறையப்படவும் விட்டிருக்கவே மாட்டேன்.**

*இயேசு : ஆறுதலான உன் வார்த்தைகள் வெறும் வார்த்தைகளாகத் தானே உள்ளன. உன் பாவச் செயல்கள் தானே என்னை சிலுவையில் அறைகின்றன. பிறரை துன்புறுத்தவும், தாக்கவும், உன் கரத்தைப் பயன்படுத்தும் போது அவை என் கைகளை ஆணிகளால் துளைக்கின்றன. செல்லக்கூடாத இடங்களைத் தேடி உன் கால்கள் செல்கின்ற போது என் கால்கள் காயப்படுகின்றன. இப்படி உன் கைகளையும், கால்களையும், மற்ற உடல் உறுப்புகளையும் நன்மை செய்ய பயன்படுத்தாமல் தீமை செய்ய பயன்படுத்தும்போது அவை என்னைச் சிலுவையில் அறைகின்றன. என்னை சிலுவையில் அன்று ஆணிகளால் அறைந்தனர். நீயோ உன் பாவங்களால் அறைகிறாய்.*

**சிறுவன் : ஆம் ஆண்டவரே ! என் கைகள், கால்கள், மற்றும் உடல் உறுப்புகளால் பாவம் செய்யும் போதெல்லாம் உம்மை சிலுவையில் அறைவது நான் தான் ஆண்டவரே! நான் தான். என்னை மன்னியும்.**

**செபம் : இயேசுவே ! என் உடல் செய்யும் பாவங்களால் உம் உடலைக் காயப்படுத்தாத நல்ல மனதை எனக்குத் தாரும். ஆமென்.**

# இயேசு சிலுவையில் உயிர் துறக்கிறார்.



**பன்னிரெண்டாம் நிலை :**

*இயேசு : பிறந்தது முதல் இந்த நிமிடம் வரை நன்மையே செய்து வந்தேன். சிலுவையில் தொங்கும் சமயத்திலும் எல்லோருக்கும் மன்னிப்பு கிடைக்க வேண்டினேன். இவற்றிற்கெல்லாம் எனக்குக் கிடைத்த பரிசு மரணம். என் மரணத்தைக் கண்டு சிலர் அழுதனர். சிலர் ஏளனம் செய்தனர். ஆனால் இது தவறு என்று உணர யாருமேயில்லை .*

**சிறுமி : ஆண்டவரே ! நான் மட்டும் அங்கு இருந்திருந்தால் நிச்சயம் உம்மை சாக விட்டிருக்கவே மாட்டேன். உம் உயிரை எப்படியாவது காப்பாற்றியிருப்பேன்.**

*இயேசு : நீயா என் உயிரை காத்திருப்பாய்! சற்று யோசித்துப் பார். கூசாமல் பொய் சொல்கிறாய். வக்கிரமாய் சண்டை போடுகிறாய். பழி தீர்த்துக் கொள்கிறாய். அப்போதெல்லாம் மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள்? என்ன சொல்கிறார்கள்? "இவனெல்லாம் கிறிஸ்தவனா? இவளெல்லாம் கிறிஸ்தவளா?" என்று சொல்கிறார்களே! அப்போதெல்லாம் சாவது நான் தான். கிறிஸ்தவம் கேவலப்படுத்தப்படும் போது மரிப்பது நான் தான். என்னை மரணத்துக்கு கையளிப்பது நீ தான். நீயே தான்.*

**சிறுமி : ஆம் ஆண்டவரே ! என் தீய சொற்களாலும், தீய செயல்களாலும் உமக்கும் கிறிஸ்தவத்துக்கும் அவப் பெயர் வருவிக்கும் போதெல்லாம் உம்மை சாகடிப்பது நான் தான் ஆண்டவரே ! நான் தான். என்னை மன்னியும்.**

***செபம் : இயேசுவே ! என் செயல்கள் உமக்கும், கிறிஸ்தவத்துக்கும் இழிவு சேர்க்காமல் பொலிவு சேர்க்கும் விதத்தில் அமைய உமது அருளை எனக்குத் தாரும். ஆமென்.***

# தாயின் மடியில் இயேசுவின் உடல் கிடத்தப்படுகின்றது



*பதின்மூன்றாம் நிலை :*

*இயேசு : எல்லோரும் போய் விட்டார்கள். என் துன்பத்தை இறுதி வரை பங்கு போட்டுக் கொள்ள என் தாய் மட்டும் தவியாய் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் மடியில் என் உடலைக் கிடத்துகிறார்கள். உயிரை இழந்த நான், சோகத்தால் உணர்விழந்த என் அன்னை , இருவரும் எல்லாத் துயரையும் அனுபவித்து விட்டோம். இப்போது அதன் உச்சத்தை எட்டியுள்ளோம். இதில் பங்கு கொள்ள வேறு யாருமேயில்லை.*

**சிறுவன் : ஆண்டவரே ! நான் மட்டும் அங்கு இருந்திருந்தால் நிச்சயமாக இந்தக் கண்ணீர் காட்சியை அனுமதித்திருக்க மாட்டேன். உம் தாயின் உள்ளத்தை நோகடித்திருக்கவே மாட்டேன்.**

*இயேசு : என் தாய் படும் வேதனையைப் பார்த்து மனதுருகும் என் அன்பு மகனே! மகளே! உன் தாயும், தந்தையும் அனுபவிக்கும் வேதனையை சற்று பார். உன்னைப் பற்றி அவர்களுக்கு எத்தனை கனவுகள். எத்தனை ஆசைகள். எத்தனை திட்டங்கள். அவற்றையெல்லாம் தகர்க்கும் விதத்தில் அல்லவா நீ நடந்து கொள்கிறாய். உன்னை உயர்ந்த ஒரு நிலைக்கு உயர்த்த முயற்சி செய்யும் அவர்களுக்கு நீ ஒத்துழைப்பு தராமல் அவர்கள் உள்ளம் உடைந்து போகச் செய்கிறாயே! அப்போதெல்லாம் என் தாயை வருத்தியது நீ தான். நீயே .தான்.*

**சிறுவன் : ஆம் ஆண்டவரே! என் பெற்றோரின் கனவுகளையெல்லாம் தகர்த்து அவர்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கையை வீணடித்து அவர்கள் உள்ளம் உடையச் செய்யும் போதெல்லாம் உம் தாயை வருத்துவது நான் தான் ஆண்டவரே நான் தான். என்னை மன்னியும்.**

**செபம் : இயேசுவே ! என் மீது அளவற்ற பாசமும், என்னைக் குறித்து மிகுந்த நம்பிக்கையும் வைத்துள்ள என் பெற்றோரின் மனதை நோகடிக்காமல் அவர்கள் மனம் குளிர நடக்கும் நல்ல மனதை எனக்குத் தாரும். ஆமென்.**

# இயேசுவை அடக்கம் செய்கிறார்கள்



*பதினான்காம் நிலை :*

*இயேசு : அனைத்தையும் நான் படைத்தேன். எல்லாம் எனக்கு சொந்தம். ஆனால் என் உடலை அடக்கம் செய்ய இந்த உலகில் எனக்கு சொந்தமான இடம் இல்லை. இரவல் கல்லறையில் நான் அடக்கம் செய்யப்பட்டேன். இறுதி ஊர்வலம் இல்லை. இறுதி மரியாதை இல்லை. அமைதியாய் முடிந்தது என் அடக்கம். எனக்கு உரிய மரியாதை தர அங்கு யாருமேயில்லை.*


**சிறுமி - ஆண்டவரே! நான் மட்டும் அங்கு இருந்திருந்தால் இப்படி சாதாரணமாக உம் அடக்கம் நிகழ விட்டிருக்கவே மாட்டேன். உரிய மரியாதையை நிச்சயம் அளித்திருப்பேன்.**

*இயேசு : எனக்கு உரிய மரியாதை தருவேன் என உறுதி தரும் என் மகனே !மகளே! மாதா, பிதா, குரு ஆகிய வாழும் தெய்வங்களுக்கு உரிய மரியாதை தருகிறாயா ? ஏன்! எனக்கும் கூட நீ சில நேரங்களில் உரிய மரியாதை தருவதில்லையே ! ஆலயத்தைப் புனிதமான இடமாக மதிக்காமல் பேசி, கிண்டல் செய்து, விளையாடி, அவமரியாதை செய்கிறாயே! அப்போதெல்லாம் எனக்கு உரிய மரியாதையை தர மறுத்தது நீதான். நீயே தான்.*

**சிறுமி : ஆம் ஆண்டவரே ! பெற்றோர், பெரியோர், ஆசிரியர் ஆகிய கண் கண்ட தெய்வகளையும் நீர் வாழும் ஆலயத்தையும் அவ மரியாதை செய்யும் போது நான் தான் உம்மை அவமதிக்கிறேன். என்னை**

**மன்னியும்.**

**செபம் : இயேசுவே ! நீர் வாழும் ஆலயத்தையும், வாழும் தெய்வங்களாகிய தாய், தந்தை, ஆசான் ஆகியோரையும் மரியாதையுடன் நடத்தும் நல்ல மனதை எனக்குத் தாரும். ஆமென்.**



# இயேசுவின் பின்னால்

இனியும் நடப்போம். இந்த பதினான்கு தலங்களில் என்னோடு நடந்து வந்த என் அன்பு மகனே! மகளே ! என் சிலுவைப் பாதையின் போது நீ இருந்திருந்தாலும் எனக்கு ஆறுதல் தருவதற்குப் பதிலாய் வேதனை தான் தந்திருப்பாய் என புரிந்து கொண்டாயா ! என் மீது சிலுவை சுமத்தியதும் என்னைத் துன்புறுத்தியதும், என்னைச் சிலுவையில் அறைந்ததும் யாரோயில்லை. நீ தான். உன் பாவங்கள் தான். இதை புரிந்து கொள். நீ ஒவ்வொரு முறை தவறும் போதும் நான் வேதனைப்படுகிறேன். சிலுவை சுமக்கிறேன். நீ தீமையின் பாதையைக் கைவிடு. அப்போது என் சிலுவைப் பாதை முடிவுக்கு வரும். அதுவரை நான் சிலுவை சுமக்கத்தான் வேண்டும். உனக்காக, உன் பாவங்களுக்காக . நான் என் சிலுவையை இறக்க வேண்டுமென்றால் நீ உன் பாவத்தை இறக்க வேண்டும். இறக்குவாயா? பதிலை சொல்லாதே ! சென்று வாழ்ந்து காட்டு.